காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். அருகில் மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன், கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

நா.கார்த்திக் - தளபதி முருகேசன் - அ.ரவி - கணபதி ராஜ்குமார் எம்.பி. - கே.ஈஸ்வரசாமி எம்.பி. பங்கேற்பு:

கோவை மண்டல - கழக விளையாட்டு மேம்பாட்டு அணி கலந்துரையாடல் கூட்டம்!

அமைச்சர் சு.முத்துசாமி சிறப்புரை! அணிச் செயலாளர் தயாநிதி மாறன் அறிக்கை!

கோவை, செப்.21-

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி கோவை மண்டல கலந்துரையாடல் கூட்டம் நாளை நடைபெறுகின்றது. இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி பங்கேற்று சிறப்பிக்கிறார் என்றும், மேலும் இதில் கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக், கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி ஆகியோர் பங்கேற்கின்றனர் என்றும், தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டல அளவிலான மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம், வருகிற ஞாயிற்றுக் கிழமையன்று (22.09.2024) காலை 10.00 மணியளவில், கோவை மாநகர் மாவட்டம், ஜி.ஆர்.ஜி. நகரில் அமைந்துள்ள "ஜெ.ஆர்" ஹாலில் நடைபெறவிருக்கின்றது. இந்நிகழ்ச்சிக்கு கோவை மாநகர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.எம்.சஞ்சய்குமார் தலைமையேற்கின்றார். மண்டலப் பொறுப்பாளரும் விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணைச் செயலாளருமான மு.வாசிம் ராஜா வரவேற்புரையாற்றுகின்றார்!

இந்த கலந்துரையாடல் கூட்டத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, கோவை மாநகர மேயர் ஆர்.ரங்கநாயகி, கழக சொத்து பாதுகாப்புக் குழுத் துணைத்தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், கோவை மாநகர துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், பகுதிக் கழகச் செயலாளர் ஏ.எஸ்.நடராஜன், வட்டக் கழகச் செயலாளர் துரை.செந்தமிழ் செல்வன், அணியின் மாநில துணைச் செயலாளர்கள் பைந்தமிழ் பாரி, எஸ்.ஆர்.பார்த்திபன், வே.நம்பி, நிவேதா ஜெசிகா, ஏ.வி.ஆர்.கோபால்ராம், எஸ்.கார்த்திக், சுரேஷ்.ஜெ.மனோகரன், வே.கௌதமன், கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் தொ.மு.தியாகராஜன், கோவை தெற்கு மாவட்ட அமைப்பாளர் ந.ஜெகதீஸ்வரன், சேலம் மத்திய மாவட்ட அமைப்பாளர் அ.அன்புக்கரசு, சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஏ.செந்தில் குமார், சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் த.ரமேஷ், தேனி வடக்கு மாவட்ட அமைப்பாளர் தி.ராஜசேகரன், தேனி தெற்கு மாவட்ட அமைப்பாளர் ரா.வசந்தன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட அமைப்பாளர் ல.கார்த்திக், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் ஆர்.பார்த்தசாரதி, துணை அமைப்பாளர்கள் மு.சு.சித்திக், வி.ஜெகநாதன், வி.உதயகுமார், ஜெ.ராகுல் ராம், க.வெங்கடேஸ்வரன், கே.என்.ராஜேஷ், ஆர்.அசோக் குமார், கி.வினோத் குமார், பா.சதீஷ்குமார், சரவணன் கணபதி, கா.தனக்குமார், ச.பாபு, சி.பாலசுப்ரமணி, மு.கோபிநாத், க.முபாரக், வா.ஆறுமுகபாண்டி, பா.பார்த்திபன், ப.மனோகரன், க.சரவணப்பிரியன், ச.அபுதாஹிர், பி.வி.சரவணன், சு.சதீஷ்குமார், பெ.சுரேஷ்குமார், அ.ரமேஷ்குமார், ந.சுரேஷ், சௌ.ஜெயபிரகாஷ், ச.பிரதீப், ச.அருண், ரா.ராஜேஷ், ஆ.இரவிக்குமார், எம்.வி.பி.பிரபாகரன், எஸ்.ராஜ்குமார், சி.நடராஜ், க.சத்தியன், அ.மயில்சாமி, ம.பிரபு, ரா.திலீபன், பி.எம்.தினேஷ் ராஜா, ரா.பச்சமுத்து, ரா.செல்வம், ச.அம்சவள்ளி, மோ.கிருஷ்ணகுமார், இரா.மதியழகன், முனைவர். கெ.சு.தங்கப்பாண்டியன், தி.செல்வமணி, வெ.ரமேஷ் பாபு, எம்.ஆர்.கிருஷ்ணவேனி, இரா.லட்சுமணபெருமாள், ப.விஜயகுமார், ஆர்.செல்வகுமார், மு.அழகர் ராஜா, கெ.இளவரசன், ப.கார்த்திக், மோ.ஆனந்த குமார், வி.பி.வேல்முருகன், ரா.பிரசாத், அ.அருண் அரவிந்த், சு.பிரவீன்குமார், எம்.கொடித்துரை, எம்.சேது ராஜா, த.சித்திரேசன், ஜெ.சங்கர், மு.அரவிந்த் குமார், பா.சந்திரமூர்த்தி, பா.சிபி சுந்தர், மா.ராஜலிங்கம், பொ.ராஜேஷ், வி.தன்ராஜ், சா.ஜெயக்குமார், எம்.வெங்கடேசன், ஜெ.அருண், எஸ்.முகமது பிலால், ஏ.சி.அய்யப்பன், எம்.வினோத்குமார் ஆகியோர் பங்கேற்கின்றனர். கோவை மாநகர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் செ.பாலமுரளிகிருஷ்ணன் நன்றியுரை வாற்றவிருக்கின்றார்.

இவ்வாறு கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், எம்.பி. தெரிவித்துள்ளார்.

வீ. கவிகணேசன் தலைமை! க.வீ.சதீஷ்குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் - இன்று

திருவொற்றியூர் 12-வது வட்டக் கழக பொது உறுப்பினர் கூட்டம்!

மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கலாநிதி வீராசாமி எம்.பி. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. - தி.மு.தனியரசு பங்கேற்பு!

சென்னை, செப்.21-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 12 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (21.09.2024 சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் சங்கீதா, பேன்கிட்ஹால், வன்னியர் தெரு, காலடிப் பேட்டை, திருவொற்றியூரில் தலைமைக் கழக வழக்கறிஞர் - 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் வீ.கவி கணேசன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார். மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தி.மு.தனியரசு எம்.சி. ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மாவட்டப் பிரதிநிதி எஸ்.பாஸ்கரன் வரவேற்புரையாற்றுகிறார். எம்.வி.குமார், பி.எஸ்.சைலஸ், பா.கண்ணபிரான், வ.மோகன், எஸ்.பாக்கியமணி, ஏ.தாராபானு, மு.சண்முகம், கே.வேணுகோபால், ஏ.ஜெயசீலன், J.ராஜ்குமார், எம்.எஸ்.பொன்ராஜ், கார்தீஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மயிலை தசரதன், இரா.பத்மநாபன், மிசா.ப.மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், எல்.ராமகிருஷ்ணன், மு.ராஜேந்திரன், அறிவழகி, பாலகிருஷ்ணன், எம்.ஆனந்தன், இரா.முருகேசன், டி.ஏ.ராஜி, சாந்தி, பக்தன், ஆர்.சி.ஆசைதம்பி, ஆர். எஸ்.சம்பத், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், கிழக்கு பகுதி வட்டசெயலாளர்கள் கு.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம். எல்.சரவணன், எஸ்.தமிழ்ச்செல்வன், குறுத்து சி.முனுசாமி, கேபிள் டிவி எம்.ராஜா, இரா.சந்தர், ஏகா.கார்த்திகேயன்,

மாவட்டப் பிரதிநிதிகள் எம்.நந்திவர்மன், ஆர்.ரஜினிபாபு, ஆர்.டில்லி, டி.டி.எம்.பாபு, வி.பழனிவேல், அ.அப்துல்சலீம், கே.கார்த்திகேயன், ம.எத்திராஜ், ப.சந்தானகிருஷ்ணன், மு.முத்துகுமார், மாமன்ற உறுப்பினர்கள் டி.சி. வி.ராஜகுமாரி, உமாசரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதிசந்தர் முன்னான் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏ.தங்கராசு, வி.வேலு எல்.கிருஷ்ணவேணி, அண்ணாதுரை, எம்.மாலதி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் முன்னணியினர் ஆகியோர் பங்கேற்கின்றனர். மாவட்டப் பிரதிநிதி ம.ஜெயராமன் நன்றிகூறுகிறார்.

12 வது வட்டக் கழகச் செயலாளர் க.வீ.சத்தீஷ்குமார் இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

மாதவரம் வடக்கு பகுதியில் 16 வது வட்டம் ஆண்டார் குப்பத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, கழக கொடி ஏற்றி வைத்தார். கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி நிர்வாகிகள் கே. சிவசங்கரன், நா. மோகன் குமார் நாகூரார், பி. தரணி, பகுதி பிரதிநிதி ராஜ்மோகன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

உண்மை நிலை அறியாமல் எடப்பாடி பழனிசாமி பொய்யான அறிக்கை விட்டுள்ளார்!

ஆலந்தூரில் அம்மா உணவகம் மூடப்படவில்லை; செயல்பட்டுக் கொண்டிருக்கிறது!

ஆதாரத்துடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கண்டன அறிக்கை!

காஞ்சிபுரம், செப்.21

ஆலந்தூரில் அம்மா உணவகத்தை மூடிவிட்டு அரசு பள்ளி நடத்துவதாக எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி உண்மை நிலையை அறியாமல் அறிக்கை வெளியிட்டுள்ளார். ஆனால் உண்மையில் ஆலந்தூரில் அம்மா உணவகத்தை மூடவில்லை என்றும், அம்மா உணவகம் அந்த பள்ளி வளாகத்தில் இயங்குகிறது என்றும், உண்மை நிலை அறியாமல் அறிக்கை விடுவது முன்னாள் முதல்வருக்கு அழகல்ல என்று புகைப்பட ஆதாரங்களுடன் எடப்பாடி பழனிச்சாமிக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆலந்தூர் வானுவம்பேட்டையில் சத்துணவு மையத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் சென்னை துவக்கப் பள்ளி

ஆலந்தூர் வானுவம்பேட்டையில் செயல்பட்டு வரும் அம்மா உணவகம்

இது குறித்து அமைச்சர் தா.மோ.அன்பரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

ஆலந்தூர் தொகுதியில் அடங்கிய வானுவம்பேட்டையில் உள்ள அம்மா உணவகத்தை மூடிவிட்டு அரசு பள்ளி இயங்கி வருவதாகவும், அப்பள்ளி மாணவர்களுக்கு வேறு இரு இடம் வழங்கிட வேண்டும் என்றும் எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் அமைச்சர் என்ற முறையிலும் இருக்கின்ற உண்மை நிலையை எடுத்து சொல்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட, 165வது வார்டு, வானுவம்பேட்டை புதுத் தெருவில் உள்ள சென்னைத் துவக்கப் பள்ளி மற்றும் அங்கன்வாடி மையம் இயங்கி வருகிறது. அப்பள்ளி வளாகத்தில் போதிய இடம் இருந்ததால் அ.தி.மு.க. ஆட்சியில் அம்மா உணவகம் துவங்கப்பட்டது. தற்போது அந்த வளாகத்தில் மாநகராட்சி ஆரம்ப சுகாதார மையமும் கட்டப்பட்டு வருகிறது.

சென்னை துவக்கப் பள்ளியில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை 65மாணவ மாணவியர்கள் படித்து வருகின்றனர். அங்கன்வாடியில் 25 குழந்தைகள் மட்டுமே உள்ளனர்.

புதிய கட்டிடம் கட்டும் பணி!

இப்பள்ளி கட்டிடம் இடிந்து விழும் நிலையில் இருந்ததால் இப்பள்ளியின் பயிலும் மாணவ - மாணவியர்களின் பாதுகாப்பு கருதி இப்பள்ளியை இடித்து விட்டு முதல்வர் அவர்களின் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் இப்பள்ளிக்கு இரண்டு அடுக்கு தளம் கொண்ட புதிய கட்டிடம் கட்டும் பணி கடந்த மாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

அங்கு கல்வி பயிலும் மாணவ - மாணவிகளின் படிப்பு பாதிக்கக்கூடாது என்பதாலும், இங்கு பயிலும் மாணவ - மாணவிகள் இப்பகுதியை சுற்றியே வசிப்பிடம் உள்ளதாலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வேறு இடத்திற்கு மாற்ற சம்மதம் தெரிவிக்கவில்லை.

எனவே அங்கு பயிலும் மாணவ, மாணவியர்களின் வசதிக்காக இப்பள்ளி வளாகத்தில் நல்ல நிலையில் இயங்கி வரும் அங்கன்வாடி மையத்தில் போதிய இட வசதி உள்ளதால் தற்காலிகமாக சென்னை துவக்கப் பள்ளி இயக்கப்பட்டு வருகிறது.

அடுத்த ஒரு சில மாதங்களுக்குள் இப்பள்ளி கட்டுமானப் பணி முடிக்கப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டு விடும். இந்த அங்கன்வாடிக்கு அம்மா உணவகத்தின் நுழைவாயில் வழியாகத் தான் செல்ல வேண்டும். இதனை மேலோட்டமாக பார்த்த அப்பகுதியில் உள்ள அ.தி.மு.க.வின் அ.தி.மு.க.வினர் கட்டுக்கதை விட்டு தலைமைக்கு தகவல் தந்துள்ளனர்.

இந்த பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தினமும் காலை 100க்கும் மேற்பட்டவர்களும், மதியம் 50க்கும் மேற்பட்டவர்களும், இரவு 150க்கும் மேற்பட்டவர்களும் சாப்பிட்டு வருகின்றனர். இது மட்டும் இல்லாமல் அருகில் பணியாற்றும் மெட்ரோ ரயில் பணியாளர்களும் அங்கு உணவருந்தி வருகின்றனர்.

தமிழகத்தில் மக்கள் வாழ்வு வளம்பெற நல்லாட்சி நடத்தி வரும் மக்கள் நலன் காக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இயங்கி வரும் அம்மா உணவகங்களை மேம்படுத்த ரூ.21 கோடி நிதியினை அண்மையில் ஒதுக்கி உத்தரவிட்டுள்ளார்.

உண்மை நிலை இப்படி இருக்கையில் அடிமட்டத்தில் உள்ள அ.தி.மு.க.வினர் அம்மா உணவகத்தில் பள்ளி நடப்பதாக கட்டுக்கதை விட்டு தலைமைக்கு தகவல் தந்ததை தீர விசாரிக்காமல் மக்கள் மத்தியில் அம்மா உணவகங்களை மூடுவது போல ஒரு மாய தோற்றத்தை உருவாக்க எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இருக்கின்ற உண்மை நிலை என்ன என்று அறியாமல் ஒரு பொய்யான அறிக்கையை வெளியிடுவது ஒரு முன்னாள் முதல்வருக்கு அழகல்ல.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

ஆவடியில்

739 மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவள்ளூர், செப்.21-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருமுல்லைவாயில் பகுதியில் உள்ள சத்தியமூர்த்தி நகர் எட்டியம்மன் நகரில் உள்ள அரசு பள்ளியில் மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்ஏ, கலந்துகொண்டு சத்தியமூர்த்தி நகரில் உள்ள மேல்நிலைப்பள்ளியில் 274 மாணவ மாணவிகளுக்கும் விஜயந்தா மேல் நிலைப் பள்ளியில் 324 மாணவ மாணவிகளுக்கு எட்டியம்மன் நகரில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் 141 பள்ளி மாணவ மாணவிகளுக்கு என மொத்தம் 739 தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது பேசுவையில் மாணவ மாணவிகள் தங்களது அறிவை வளர்த்துக் கொண்டு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத்திற்கும் கல்விக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார் அரசு பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பு செய்து கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொடக்கப் பள்ளியிலும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு பள்ளிக்கு வரும் மாணவ மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்து உள்ளார்.

எனவே எதற்காகவே நீங்கள் தயங்காமல் பள்ளிக்கு வருகை தந்து படிக்க வேண்டும் அது மட்டும் அல்லாமல் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத் துறைக்கு தனி அந்தஸ்து ஏற்படுத்தியுள்ளார் பள்ளி மாணவ மாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை பங்கேற்று தங்களது திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் மாவட்ட கல்வி அலுவலர் கஸ்தூரி, மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் நகர்மன்ற உறுப்பினர்கள் ஜெயப்ரியா சரவணன் துளசி சிங்கம்சக்திவேல், தலைமை ஆசிரியர்கள் செந்தில்குமார், கலியபெருமாள், தனலட்சுமி வார்டு செயலாளர் ராஜி உள்பட பெற்றோர் ஆசிரியர் கழகம் நிர்வாகிகள் ஆசிரியர்கள் திமுக நிர்வாகிகள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

டெல்லி - வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதா:

நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆலோசனை!

5 மாநிலங்களுக்கு நேரில் சென்று கருத்துக்கேட்க திட்டம்!

புதுடெல்லி, செப். 21-

வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதா குறித்து தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு நேரில் சென்று கருத்துக் கேட்க நாடாளுமன்றக் கூட்டுக் குழு முடிவு செய்துள்ளது.

வக்பு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில் வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு தாக்கல் செய்துள்ளது. ஒன்றிய அரசின் மசோதாவிற்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இதையடுத்து வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து இன்றும் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவினர் ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர். நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் அகில இந்திய முஸ்லிம் சட்ட வாரியத்தின் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு அவர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. மசோதாவுக்கு அகில இந்திய சட்ட வாரியம் கடும் எதிர்ப்பு தெரிவித்ததாக தெரிகிறது. இதனிடையே சட்ட மசோதா குறித்து ஐந்து முக்கிய மாநிலங்களுக்கு நேரில் சென்று கருத்துகளை கேட்க நாடாளுமன்றக் கூட்டுக் குழு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானா, மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு நேரில் சென்று கருத்துகளை கேட்க நாடாளுமன்றக் கூட்டுக் குழு முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றக் கூட்டுக் குழு உறுப்பினர்கள் இம்மாத இறுதியில் சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், அகமதாபாத், மும்பை ஆகிய நகரங்களுக்கு நேரில் சென்று கருத்துகளை கேட்டறிய திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேயர் ஆர்.பிரியாவிடம் உலகளாவிய கால்நடை மருத்துவ சேவைகள் நிறுவன இயக்குநர் டாக்டர் கார்லெட் ஆனி ஃபெர்னான்டஸ் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தெருநாய்களுக்கான கணக்கெடுப்பு2024க்கான அறிக்கையினை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சமர்ப்பித்தார். இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், கால்நடை மருத்துவ அலுவலர் டாக்டர் ஜெ.கமால் உசேன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.